**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

## AA3 பரீட்சை – 2020 சனவரி

## (AA32) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**வினாத்தாள் பற்றிய கண்ணோட்டம் :**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கி மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

1. பகுதி **A** ஆனது 20 புள்ளிகளுக்காக நான்கு கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. – **ஒவ்வொன்றுக்கும் 05 புள்ளிகள்**
2. பகுதி **B** ஆனது 30 புள்ளிகளுக்காக மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. – **ஒவ்வொன்றுமக்கும் 10 புள்ளிகள்**
3. பகுதி **C** ஆனது 50 புள்ளிகளுக்காக இரண்டு கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. – **ஒவ்வொன்றுமக்கும் 25 புள்ளிகள்**

**பொதுவான கருத்துக்கள் :**

இவ்வினாத்தாளுக்கான பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது. எவ்வாறாயினும், சில பொதுவான தவறுகளும் காணப்பட்டன.

**பகுதிரீதியான செயலாற்றுகை:**

**பகுதி A** ஆனது 20 புள்ளிகளுக்காக நான்கு கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியாக இருந்தது. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 1 | திருப்தியில்லை |
| 2 | திருப்தியானது |
| 3 | நன்று |
| 4 | திருப்தியானது |

**பகுதி B** ஆனது 30 புள்ளிகளுக்காக மூன்று கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியாக இருந்தது. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 5 | திருப்தியானது |
| 6 | திருப்தியானது |
| 7 | திருப்தியானது |

**பகுதி C** ஆனது 50 புள்ளிகளுக்காக இரண்டு கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை நன்றாக இருந்தது. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 8 | நன்று |
| 9 | நன்று |

## பகுதி A

## வினா இல. 01

தனிநபர் ஒருவரின் நிதிசார் சுயாதீனம் பற்றி இவ்வினா பரீட்சித்திருந்தது. இங்கு நிதிசார் சுயாதீனத்தை அடைவதற்கான வழிகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்திருக்கவில்லை.

**பொதுவான தவறுகள்:**

சில பரீட்சார்த்திகள் வினாவின் தேவைப்பாட்டினைத் தெளிவாக விளங்கிக் கொண்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் ‘‘நிதி சுயாதீனத்தை அடைவதற்கு ஒரு தனிநபரால் ஒரு வேலை செய்தல்’’ என வெறுமனே குறிப்பிட்டிருந்தனர். அவர்கள் வினாவின் தேவைப்பாட்டைக் கருத்திற்கொள்ளாது விடைகளை அளித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகளிடம் நிதிசார் சுயாதீனம் பற்றிய அறிவு குறைவாகவே காணப்பட்டது.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியளிக்கவில்லை.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

பரீட்சார்த்திகள் பாடத்துடன் சம்பந்தப்பட்ட கோட்பாட்டு எண்ணக்கருக்கள் மீதான விளக்கத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

## வினா இல. 02

இவ்வினா பாதீட்டுக் கட்டுப்பாட்டின் பலவீனங்களைப் பரீட்சித்திருந்தது. இங்கு பாதீட்டுக் கட்டுப்பாட்டின் மூன்று வரையறைகளை விபரிக்குமாறு கோரப்பட்டது.

**பொதுவான தவறுகள்:**

சில பரீட்சார்த்திகள் வரையறைகளைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக பாதீட்டுக் கட்டுப்பாட்டின் நல்ல பக்கம் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பாதீட்டுக் கட்டுப்பாட்டின் அம்சங்கள் பற்றி ஆராய்ந்திருந்ததுடன் வேறு சிலர் பாதீட்டுக் கட்டுப்பாட்டின் பலவீனங்களுக்குப் பதிலாக அரசாங்கப் பாதீடு பற்றி ஆராய்ந்திருந்தனர்..

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியாக இருந்தது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

பரீட்சார்த்திகள் பாதீட்டுக் கட்டுப்பாடு தொடர்பான தங்களுடைய அறிவை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

## வினா இல. 03

இவ்வினா தொழிற்படு மூலதன சுற்றுக்காலத்தின் பிரயோகம் தொடர்பில் பரீட்சித்திருந்தது. இங்கு, தரப்பட்ட கம்பனியின் தொழிற்படு மூலதனச் சுற்றுக்காலத்தைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாகவும் இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

இருப்புகளுக்கான உரிய நாட்கள், வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகள் போன்றவற்றைக் கணிப்பிடும்போது சில பரீட்சார்த்திகள் தவறுவிட்டிருந்தனர். தொழிற்படு மூலதனச் சுற்றுக்காலத்தைக் கணிப்பிடும்போது, சில பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய நாட்களைக் கழிப்பதற்குப் பதிலாக சேர்த்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் செய்முறைகளைக் காட்டியிருக்கவில்லை.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை நன்று.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- விடையெழுதுவதற்கு முன்னர் வினாவைச் சரியாக வாசிக்கவும்.
- இதேமாதிரியான கடந்தகால வினாக்களில் பயிற்சி பெறவும்.
- பாடப் புத்தகத்தை நன்கு படிக்கவும்.

## வினா இல. 04

இவ்வினா தொடர்புடைய கிரய எண்ணக்கருக்களின் பிரயோகம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு, விசேட கட்டளையின் தொடர்புடைய கிரயத்தைக் கணிப்பிடுமாறும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமா, இல்லையா என்பதைக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டது.

**பொதுவான தவறுகள்:**

அதிகளவான பரீட்சார்த்திகள் மூலப்பொருள் தொகையின் தொடர்புடைய கிரயத்தைக் கண்டுபிடிப்பதற்குத் தவறியிருந்தனர். அத்துடன் விசேட கட்டளையின் நேர் கூலிக் கிரயத்தைக் கருத்திற்கொள்ளும்போது பிழைவிட்டிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் கம்பனியின் சோம்பல் காலம் 340 கூலி மணித்தியாலங்கள் என்பதை விளங்கிக்கொள்ளவில்லை. இதனால், நேர் கூலிக் கிரயமானது ஒரு தொடர்புடைய கிரயமன்று, எவ்வாறாயினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் நேர் கூலிக் கிரயத்தை ஒரு தொடர்புடைய கிரயமாகக் கருத்திலெடுத்திருந்தனர்.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- இதேமாதிரியான கடந்தகால வினாக்களில் பயிற்சி பெறவும்.
- எண்ணக்கருக்கள் பற்றிக் கற்று தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளவும்.
- செய்முறைகளைத் தெளிவாகக் காட்டவும்.

**<u>பகுதி B</u>**

## வினா இல. 05

இவ்வினா, எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையிலான தீர்மானமெடுத்தல் பற்றிப் பரீட்சித்திருந்தது. இங்கு, எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் தரப்பட்ட கம்பனியினால் எந்த உற்பத்திப்பொருள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதை மதிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

**பொதுவான தவறுகள்:**

- சில பரீட்சார்த்திகள் நிகழ்தகவைக் கருத்திலெடுக்கவில்லை. அவர்கள் நிகழ்தகவைக் கணக்கிலெடுக்காது வெறுமனே கணிதக் கணிப்பீடுகளைச் செய்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள், அலகுகளை நிகழ்தகவினால் பெருக்கியிருந்தனராயினும் உரிய பெறுமதிகளினால் பெருக்கியிருக்கவில்லை.
- சில பரீட்சார்த்திகள், விநியோகக் கிரயத்தை விற்பனை விலையுடன் பிழையாகச் சேர்த்திருந்தனர்.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாக்களில் பயிற்சி பெறவும்.
- கணிப்பீட்டு வழுக்களைத் தவிர்க்கவும்.
- செய்முறைகளைக் காட்டவும்.

## வினா இல. 06

இவ்வினா, நெகிழ்ச்சிப் பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு, எல்லைக் கிரயமிடல் முறையைப் பயன்படுத்தி தொழிற்பாட்டுக்கூற்று / பாதீட்டுக் கட்டுப்பாட்டுக் கூற்றினைத் தயாரிப்பது தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது.

**பொதுவான தவறுகள்:**

- அதிகளவான பரீட்சார்த்திகள் நெகிழ்ச்சிப் பாதீட்டைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை.
- நிலையான கிரயமானது நடவடிக்கை மட்டத்திற்கிணங்க நெகிழ்ச்சியாக்கப்பட்டிருந்தது.
- சில பரீட்சார்த்திகள், முரண்களை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிச் சரியான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் சாதகமான நிலைமைகளையும் பாதகமான நிலைமைகளையும் குழப்பி எழுதியிருந்தனர்.
- நிலையான பாதீடானது நெகிழ்ச்சிப் பாதீடெனப் பிழையாகப் பெயரிடப்பட்டிருந்தது.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.
- பாதிடல் தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட வேண்டும்.

## வினா இல. 07

இவ்வினா வரையறைக் காரணிகளை இனங்காண்பதையும் கம்பனியானது வரையறைக் காரணியொன்றைக் கொண்டிருக்கும்போது எவ்வாறு உத்தமமான உற்பத்திக் கலவையைக் கணிப்பிடுவது என்பதையும் பரீட்சித்திருந்தது.

**பொதுவான தவறுகள்:**

- சில பரீட்சார்த்திகள், வரையறைக் காரணியை இனங்காண்பதற்கான போதியளவு அறிவினைக் கொண்டிருக்கவில்லை.
- சிலர் மீற்றர் ஒன்றிற்கான பங்களிப்பைக் கணிப்பிடாததுடன் ஒழுங்குமுறையில் அதைத் வரிசைப்படுத்தவும் இல்லை.
- சில பரீட்சார்த்திகள், அலகுப் பங்களிப்பினை அலகொன்றிற்குத் தேவையான மூலப்பொருளினால் வகுப்பதற்குப் பதிலாக அவற்றைப் பெருக்கியிருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் வரைபட முறையைப் பயன்படுத்தி தீர்வுகாண முயற்சித்திருந்தனர்.
- கணிப்பீட்டுத் தவறுகள்கூட அவதானிக்கப்பட்டிருந்தன.
- சில பரீட்சார்த்திகள் பங்களிப்பை வரிசைப்படுத்தாது கிடைக்கக்கூடிய வளங்களை கண்டுபிடித்திருந்தனர்.
- செய்முறைகள் சரியானவாறு காட்டப்பட்டிருக்கவில்லை.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.
- செய்முறைகளைக் காட்டவும்.
- கணிப்பீட்டுத் தவறுகளைத் தவிர்க்கவும்.

<u>பகுதி C</u>

## வினா இல. 08

இவ்வினாவின் **பகுதி A** ஆனது, சாதாரண பங்குகளின் கிரயம், முன்னுரிமைப் பங்குகளின் கிரயம், தனிச்சங்களின் கிரயம் மற்றும் WACC ஆகியவற்றைக் கணிப்பிடுவதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றலைப் பரீட்சித்திருந்தது.

இவ்வினாவின் **பகுதி A** ஆனது, NPV கணிப்பீடுகளின் அடிப்படையில் வாங்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதைப் பரீட்சித்திருந்தது.

**பொதுவான தவறுகள்:**

<u>பகுதி A</u>

- அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான எண்ணக்கருவை விளங்கிக்கொண்டிருக்கவில்லை. அவர்கள் சரியான சூத்திரத்தைப் பிரயோகித்திருக்கவில்லை, பிரதானமாக தனிச்சங்களின் கிரயம் மற்றும் WACC ஆகியவற்றைக் கணிப்பிடும்போது சரியான சூத்திரம் பிரயோகிக்கப்படவில்லை.
- பங்கிலாப வளர்ச்சி இல்லை என எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் கணித ரீதியிலான பங்கிலாப மாதிரியைத் தீர்ப்பதற்கான பயிற்சி காணப்படவில்லை.
- தனிச்சங்களின் கிரயத்தைக் கணிப்பிடுகையில் வரியானது கணக்கில் எடுக்கப்படவில்லை.
- தனிச்சங்களின் கிரயம் மீட்கப்படமுடியாததாகக் கருதப்பட்டது.
- WACC ஐக் கணிப்பிடும்போது சந்தை விலை கருத்தற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை நன்று.***

<u>பகுதி B</u>

- அதிகளவான பரீட்சார்த்திகள் தொடர்புடைய கிரயங்கள் எவை, தொடர்பற்ற கிரயங்கள் எவை எனற விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை.
- சில பரீட்சார்த்திகள் மூலதனப் படிக்காக 4 ஆண்டுகளைக் கருத்திற் கொள்வதற்குப் பதிலாக 5 ஆண்டு களைக் கருத்திற் கொண்டிருந்ததுடன் தேய்மானம் காசுப் பாய்வின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக வரிக் கணிப்பீடும்கூட பிழைத்துப் போயிருந்தது.
- மூலதனப் படிக் கணிப்பீட்டிற்காக ஒடிவுப் பெறுமதி / விற்பனைப் பெறுமதி கருத்திற் கொள்ளப்பட்டது.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை நன்று.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.
- உங்களுடைய செய்முறைகளை எப்பொழுதும் காட்டவும்.
- கோட்பாட்டுரீதியான அறிவைச் சரியானவாறு பெற்றுக்கொள்வதற்கு பாடப் புத்தகத்தைப் படிக்கவும்.

## வினா இல. 09

இவ்வினாவின் **பகுதி A** ஆனது, உள்ளகரீதியான தொடர்புடைய உற்பத்திக் கிரயத்தை வெளிமூலமிடலுடன் தொடர்புடைய கிரயத்துடன் ஒப்பிடுவதன் மூலம் மேற்கொள்வதா அல்லது வாங்குவதா என்ற முடிவை எடுப்பதைப் பரீட்சித்திருந்தது.

**பகுதி B** ஆனது மூலப்பொருள் கலவை முரண், மூலப்பொருள் விளைவு முரண், மூலப்பொருள் விலை முரண் ஆகியவற்றை எவ்வாறு கணிப்பிடுவது என்பதையும் உண்மைப் பங்களிப்புடன் பாதிடப்பட்ட பங்களிப்பை இணக்கஞ் செய்வதற்கு, கணிப்பிடப்பட்ட முரண்களைக் கூட்டிணைத்து தொழிற்பாட்டுக் கூற்றினைத் தயாரிப்பதையும் பரீட்சித்திருந்தது.

**பொதுவான தவறுகள் - பகுதி A:**

- அதிகளவான பரீட்சார்த்திகளால் விடையைப் பூரணப்படுத்த இயலவில்லை. சரியாகக் கணிப்பீடுகளைச் செய்தவர்கள்கூட நிகரச் சேமிப்புத் தொகையைச் (ரூபா 562,000/-) சரியாகக் குறிப்பிடவில்லை.
- சில பரீட்சார்த்திகள் நிலையான மற்றும் மாறும் விற்பனை மற்றும் விநியோகக் கிரயங்களான ரூபா 240,000/- மற்றும் ரூபா 460,000/- ஆகியவற்றை வெளிமூலமிடல் கிரயமான ரூபா 10,880,000/- இலிருந்து கழித்திருந்தனர். உற்பத்தியின் நிகரச் சேமிப்பைப் பெறும்போது, அந்த இரண்டு கிரயங்களும் தொடர்பற்றதெனக் கருதப்பட வேண்டும். வெளிமூலமிடலின் மொத்தக் கிரயத்தைப் பெறும்போது, அந்த இரண்டு கிரயங்களும் வெளிமூலக் கொள்வனவு விலையுடன் சேர்க்கப்பட வேண்டும்.
- சில பரீட்சார்த்திகள், மொத்த உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடும்போது வருடாந்த நிலையான உற்பத்திக் கிரயமான ரூபா 750,000/- இனை கைவிட்டிருந்தனர்.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை நன்று.***

**பொதுவான தவறுகள் - பகுதி B:**

- பெரும்பாலான பரீட்சார்த்திகள் முரண்களைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. முரண்களைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தவர்களால் சரியான சூத்திரத்தைப் பயன்படுத்தி சரியான தொழிற்பாட்டுக் கூற்றைத் தயாரிப்பதற்கு முடிந்திருந்தது.
- முரண்களின் சூத்திரங்கள் சரியாக எழுதப்பட்டிருந்தபோதிலும், அதிகளவான சந்தர்ப்பங்களில் எண்பெறுமானங்களின் பிரதியீடு பிழையாகச் செய்யப்பட்டிருந்தது.
- சில பரீட்சார்த்திகள், சாதகமானது மற்றும் பாதகமானது போன்றவற்றை பிழையாகக் குறிப்பிட்டிருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள், முரண்கள் சாதகமானதா அல்லது பாதகமானதா என்பதைக் குறிப்பிடுவதை முற்றாகத் தவிர்த்திருந்தனர்.
- நேர் மூலப்பொருள் விளைவு முரணின் கணிப்பீட்டிற்காக, அதிகளவான பரீட்சார்த்திகள் 16,700 என்ற உண்மையான அலகுகளைப் பிரயோகிப்பதற்குப் பதிலாக 17,500 என்ற பாதிடப்பட்ட அலகுகளைப் பிரயோகித்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் கணிப்பிடப்பட்ட முரண்களை தொழிற்பாட்டுக் கூற்றில் குறிப்பிட்டிருக்கவில்லை.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை நன்று.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- பரீட்சார்த்திகள், முரண்களின் சூத்திரங்களை பல்வேறு விவரணங்களில் பயிற்சி பெறுதல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள், சகல செய்முறைகளையும் காட்டுவதற்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.
- முரண் பகுப்பாய்வில் எண்பெறுமானங்களைச் சரியாகப் பிரதியிட்டு சூத்திரங்களை முன்வைக்க வேண்டும்.

- * * * -